தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 7-11-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் தொழில்நுட்ப மிதிவண்டி பேரணி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பில் வேளாண் தொழில்நுட்ப பேரணி கடந்த சனிக்கிழமை 1-11-2014 அன்று காலை நடைபெற்றது. இந்த மிதிவண்டி பேரணியை பல்கலைக்கழக முதன்மையர் (வேளாண்மை) முனைவர் ச. மகிமைராஜா மற்றும் முதுநிலைக் கல்வி முதன்மையர் முனைவர் மோகன் ஆகியோர் தொடக்கி வைத்தனர்.

நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் நூறு பேர் கலந்து கொண்ட இப்பேரணி பல்கலைக்கழக வளாகம், மருதமலை சாலை, தொண்டாமுத்தூர், தென்னமநல்லூர் வரை 17 கி.மீ. தூரம் நடைபெற்றது. தென்னமநல்லூரில் நடைபெற்ற கூட்டத்தில் தென்னமநல்லூர் ஊராட்சி ஒன்றிய தலைவர் தென்னை சிவா அவர்கள் மாணவர்களை வரவேற்றார். இந்த கூட்டத்தில் பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. குமுதா அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் தொழில்நுட்பங்களை கிராம மக்கள் குறிப்பாக உழவர்கள் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினார். மிதிவண்டி பேரணியில் கலந்து கொண்ட மாணவர்கள் பல்கலைக்கழக தொழில்நுட்பங்கள் பற்றிய பதாகைகளை எடுத்து சென்றனர்.

விழாவிற்கு வருகை தந்தவர்களுக்கு நாட்டுநலப் பணித்திட்ட அலுவலர் முனைவர் இரா. பாவேந்தன் அவர்கள் நன்றி கூறினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்